**களுத்துறை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 01 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களுத்துறை நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல. 2 இன் பிரகாரம் இறுதிக் கணக்குகளுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த டபிள் கப் வண்டிக்காக மீளாய்வாண்டிற்குரித்தாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 706,273 தொகையான தவணைப் பணம் மாத்திரம் மூலதனச் செலவினக் கணக்கு வரவு வைக்கப்பட்டு மூலதனப் பயன்பாட்டிற்காக வருமானத்திலிருந்து பங்களிப்புக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் கப் வண்டியின் மொத்தப் பெறுமதி ஆண்டிற்கான உபகரணச் செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மூலதனப் பயன்பாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்புக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் மூலதனச் செலவினமும் மூலதனப் பயன்பாட்டிற்காக வருமானத்திலிருந்து பங்களிப்புக் கணக்கின் மீதியும் அப் பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செலவினப் பேரேட்டின் படி மீளாய்வாண்டின் போது ரூபா 186,700 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சீசீரீவீ இயந்திரம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 யூலை 31 ஆம் திகதி ரூபா 63,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மரத்தளபாடங்கள், களஞ்சிய முற்பணக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்படுவது சீராக்கப்படுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் ரூபா 63,000 தொகை மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணக் கணக்கு வரவு வைக்கப்பட்டு களஞ்சிய முற்பணக் கணக்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக களஞ்சிய முற்பணக் கணக்கு வரவு வைக்கப்பட்டு உபகரணச் செலவினக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணச் செலவினக் கணக்கும் களஞ்சிய முற்பணக் கணக்கு மீதியும் ரூபா 126,000 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2013 சனவரி 24 ஆம் திகதி உறுதிச்சீட்டு இல. 268 இன் காசுக் கணக்கு ரூபா 666,656 தொகையும் வைப்புக் கணக்கு ரூபா 65,487 தொகையும் ஏனைய வருமானக் கணக்கு ரூபா 19,323 தொகையும் செலவு வைக்கப்பட்டு கடன்கொடுத்தோர் கணக்கு ரூபா 654,872 தொகையும், பெறுமதி சேர் வரிக் கணக்கு ரூபா 96,584 தொகையும் வரவு வைக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டிருந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டு இரத்துச் செய்யப்பட்டு அக் கணக்குப் பதிவுகள் மீளச் சீராக்கப்படுகையில் கடன்கொடுத்தோர் கணக்கு ரூபா 654,872 தொகை செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ரூபா 666,656 செலவு வைக்கப்பட்டிருந்தமையாலான வேறுபாடு சீராக்கப்படுகையில் ரூபா 11,774 தொகையான கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக அப் பெறுமதி திரண்ட நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 23,277,898 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,278,832 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,393,240 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 23,267 | 13,762 | 24,885 |
| (ii) | வாடகை | 212 | 412 | (200) |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 320 | 313 | 14 |
| (iv) | ஏனைய வருமானம் | 11,923 | 8,718 | 6,592 |

**2.2.2 வீதவரி**

2013 திசெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட வீதவரி நிலுவையின் மீதி ரூபா 27,305,455 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 606 வரிசெலுத்துனர்களிடமிருந்து ரூபா 14,526,655 தொகையான மீதி நிலுவையாகக் காணப்பட்டது. இம் மீதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 11,915,112 தொகையான மீதி காணப்பட்டதுடன் இது 2013 திசெம்பர் மாதம் வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 குத்தகை வாடகை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) படு கபடா வீதி புதிய விற்பனைத் தொகுதியில் 02 கடைகளிலிருந்து ரூபா 98,300 தொகையும் புதிய கடைத் தொகுதியின் கீழ் மாடி, முதலாம் மாடி மற்றும் மேல் மாடியின் 12 கடைகளிலிருந்து ரூபா 60,700 தொகையும் பஸ் தரிப்பிடத்தின் மேல் மாடியின் ஒரு கடையிலிருந்து ரூபா 9,000 தொகையும் பழைய கடைத் தொகுதியின் 7 கடைகளிலிருந்து ரூபா 356,875 தொகையும் யூன் 30 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) புதிய கடைத் தொகுதியின் B1 ஆம் இலக்க மண்டபம், C மற்றும் B2 மண்டபம் 1998 முதல் 2001 திசெம்பர் 19 ஆம் திகதி வரை ச.தொ.ச நிறுவகத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அக் கடைகளுக்குரித்தான ரூபா 268,668 தொகையான நிலுவை வாடகை மீதி கணக்காய்வுத் தினமாகிய 2013 திசெம்பர் 06 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 132,400 கூட்டுத்தொகையான வாடகை நிலுவையாகக் காணப்பட்டமையால் புதிய கடைத் தொகுதியில் கீழ் மாடியின் 5 கடைகள் 2013 யூலை 17 ஆம் திகதி முத்திரையிடப்பட்டிருந்ததுடன் நிலுவையான வாடகையை அறவிடப்படாது தலைவரின் கட்டளைப்படி அக் கடை அத்தினமே திறந்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபையிடமுள்ள கடைகள் வாடகைக்கு வழங்கப்படுவதற்கான உடன்படிக்கை 1986 மற்றும் இதற்கு முன்னைய ஆண்டுகளின் போது ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையானதுடன் அதில் எந்த உடன்படிக்கையும் புதுப்பிக்கப்படுவதற்கு 2013 நவம்பர் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1980 திசெம்பர் 03 ஆம் திகதிய 1980.∵.46 ஆம் இலக்க மேல் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் படி, வாடகையாளருக்கு வியாபாரத்தை நடாத்திச்செல்ல முடியாதெனத் தோன்றும் சந்தர்ப்பத்தின் போது அல்லது வாடகையாளர் மரணிக்கும் சந்தர்ப்பத்தின் போது அவரது துணையாளுக்கு அல்லது பிள்ளைக்கு அக் கடையின் உரித்து சபையின் நியதிக்குட்பட்டு ஒப்படைக்கப்பட முடியும். இவ்வாறே வாடகைக்குடியிருப்பாளரால் கடை மீள் வாடகைக்கிடப்படுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் மீள வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தின் போது வாடகைக்குடியிருப்பாளரின் அனுமதிப்பத்திரம்.∵. குத்தகை இரத்துச் செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டிருக்கையிலும் கடை வாடகை உடன்படிக்கையின் 11 ஆம் பந்தியின் படி, வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள கடை மீள் வாடகைக்கிடப்படலாகாது என குறிப்பிடப்பட்டிருக்கையில் 75 கடைகள் மீள் வாடகைக்கிடப்பட்டிருந்தமை சபையால் 2012 மார்ச் 19 ஆம் திகதி கண்டறியப்பட்டிருந்த போதிலும் அவை சபையால் மீளப் பொறுப்பேற்கப்பட்டு கேள்வி மனுக்கோரப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 திசெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் தொட்டுபொல சந்தியின் 6 மீன் கடைத் தொகுதிகளிலிருந்து ரூபா 91,800 தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இந் நிலுவை மீதி 10 மாதங்கள் முதல் 9 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு உரித்தானவையாகக் காணப்பட்டன.

(எ) வெள்ளிக்கிழமை சந்தை இல. 2 ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் கடை 2013 ஏப்ரல் மாதம் முத்திரையிடப்பட்டு சபைக்குப் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் மீள கேள்வி மனுக்கோரப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2014 யூலை 31 ஆம் திகதி சட்டத்தரணிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 02 கடைகளிலிருந்து ரூபா 105,350 தொகையான நிலுவை மீதி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந் நிலுவை மீதி 1 வருடம் முதல் 7 வருடங்கள் வரையான வீச்சிற்குரித்தானவையாகக் காணப்பட்டன.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம், கைத்தொழில் வரி, வியாபார வரி

2013 ஆம் ஆண்டிற்குரித்தான 06 வியாபாரங்களிலிருந்து ரூபா 5,500 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணமும், 02 வியாபாரங்களிலிருந்தான கைத்தொழில் வரியான ரூபா 1,300 தொகையும், 187 வியாபாரங்களிலிருந்தான ரூபா 336,800 வியாபார வரியும் 2014 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டன.

### 2.2.5 ஏனைய வருமானம்

அதிகாரப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த 14 விளம்பரப் பலகைகளிற்காக 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளிற்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 736,539 தொகையான விளம்பரப் பதாதைகளின் கட்டணம் 2013 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 போதிய அதிகாரப் பொறுப்பினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

**(அ) போக்குவரத்துச் செலவினம்**

(i) தலைவரால் ஏதேனும் போக்குவரத்துச் செலவினமோ அல்லது இணைந்த படிப்பணமோ பெற்றுக்கொள்ளப்படுகையில் அப் பயணத்திற்குரித்தான செயற்பாடுகள் ஏதேனும் தீர்மானத்தின் மூலம் தலைவருக்கு ஒப்படைக்கப்பட்ட செயற்பாடாக அல்லது தலைவரின் நிர்வாகச் செயற்பாட்டிற்குரிய பயணமாக அல்லது ஏதேனும் நிறுவகத்தின் மூலம் தலைவர் அழைக்கப்பட்ட சந்தர்ப்பமாக உறுதிப்படுத்தும் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய எவ்வித சான்றும் சமர்ப்பிக்கப்படாது தலைவரால் மீளாய்வாண்டின் போது 107 நாட்களுக்காக ரூபா 52,865 தொகையான இணைந்த படிப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) ஒரு நகர சபை உறுப்பினரின் இல்லத் தொலைபேசிக்காக மாதாந்தம் ஆகக் கூடுதலான எல்லை வரையான தொலைபேசிக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கையில் மேலும் ரூபா 15,019 தொகையான நிலுவை மீதி காணப்பட்டமையால் 2013 ஏப்ரல் மாதம் முதல் தொலைபேசி துண்டிக்கப்பட்டிருந்ததுடன் சபையால் 2013 நவம்பர் 05 ஆம் திகதிய பொதுக் கூட்டத் தீர்மானத்தின் படி இப் பணத்தைச் செலுத்துவதற்கான அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது சபைச் செயலாளர் பதவியில் தொலைபேசிச செலவின மீளளிப்புத் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 செப்தெம்பர் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி, இல்லத் தொலைபேசிப் பட்டியல் தீர்க்கப்படுவதற்காக உரித்தைப் பெறாத உத்தியோகத்தர்களுக்காக சுற்றறிக்கையின் 4.3.1(vii) ஆம் பந்தியின் படி அரசாங்கச் செலவினத்தின் தொலைபேசிப் பட்டியல்கள் மீளளிக்கப்படுவதற்குரித்தான அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறெனினும், உள்ளூராட்சி நிறுவகம் உத்தியோகத்தர்களுக்காக இச் சுற்றறிக்கையின் கீழ் கொடுப்பனவு செய்வதற்கு ஆளுனரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது சபையின் முன்னாள் செயலாளரின் அலுவலகம், இல்ல மற்றும் கையடக்கத் தொலைபேசிச் செலவினத்திற்காக 2012 சனவரி முதல் 2013 பெப்ரவரி வரை ரூபா 52,045 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ii) இவ்வாறே மேற்குறித்த சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய செயலாளரின் அலுவலக இல்ல மற்றும் கையடக்கத் தொலைபேசிச் செலவினத்திற்காக மாதாந்தம் ரூபா 4,000 தொகையான வரையறையில் 2013 மார்ச் முதல் திசெம்பர் வரை ரூபா 27,128 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(iii) கணக்காய்வுத் தினமாகிய 2014 சனவரி 15 ஆம் திகதி வரையிலும் சபையின் முன்னாள் செயலாளரால் உத்தியோகபூர்வ இல்லம்

பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ் உத்தியோகபூர்வ இல்லத்தில் 2013 திசெம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவையான தொலைபேசிச் செலவினம் ரூபா 14,503 தொகையானதுடன் ரூபா 5,000 தொகை மாத்திரம் 2013 திசெம்பர் 30 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, மேலும், அறவிடப்பட வேண்டிய ரூபா 9,503 தொகையான நிலுவைத் தொகை 2014 பெப்ரவரி வரையிலும் செயலாளரால் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

சபையால் நடாத்தப்பட்டு வந்த தென் களுத்துறை முன்பள்ளி தொடர்பாக 2013 நவம்பர் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) 2013 ஆம் ஆண்டின் போது முன்பள்ளிக்கு மாணவர்களைச் சேர்க்கையில் சபை எவ்வித அங்கீகாரமும் இன்றி ஒரு பிள்ளையிடம் ரூபா 600 படி ரூபா 45,000 தொகையை அறவிட்டிருந்தமை 2013 நவம்பர் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது கண்டறியப்பட்டது. இவ்வாறு அறவிடப்பட்ட பணம் எவ்வித வங்கிக் கணக்கிலும் வைப்புச் செய்யபட்டிராததுடன் முன்பள்ளி மாணவன் ஒருவரின் தாயாரின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது. இவ் வகையில் பணம் அறவிடப்படுவது பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மேற்கொள்ளப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

(ii) இவ்வாறு சேகரிக்கப்படும் பணம் முதலாம் ஆண்டின் இறுதியில் நடாத்தப்படும் முன்பள்ளி பல்சுவை அம்சங்களின் உணவுச் செலவினங்கள் மற்றும் ஏனைய சிறிய செலவினங்களுக்காக ஏற்கப்படுவது கண்டறியப்பட்டது. எவ்வாறெனினும், இவ்வாறு வருடாந்தம் அறவிடப்பட்ட பணம், செலவிடப்பட்ட பணம் தொடர்பாக எவ்வித சான்றும் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் கணக்காய்வுப் பரிசோதனையின் 2 ½ வாரங்களுக்குப் பின் 2013 திசெம்பர் 12 ஆம் திகதி சபையின் முன்பள்ளி மேற்பார்வையாளராலும் பணம் வைத்திருந்த நபராலும் ரூபா 36,601 தொகைக்கு பட்டியல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(iii) இவ்வகையில் ஆண்டின் இறுதியில் நடாத்தப்படும் முன்பள்ளி பல்சுவை அம்சங்களிற்காக ஆண்டின் ஆரம்பத்தில் பணம் சேகரிக்கப்பட்டு ஆண்டு பூராவும் கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

**2.5 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) களுத்துறை வடக்கு பொன்சேகா ஒழுங்கை தாரிடல்**

மேற்குறித்த வீதியை 15 அடி அகலத்திலும் 1160 அடி நீளத்திலும் தாரிடுவதறகாக ரூபா 928,944 தொகையான ஓர் மதிப்பீடு 2012 செப்தெம்பர் 26 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் நேர் உழைப்பு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2014 சனவரி 02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) அங்கீகரிக்கப்படாத மதிப்பீட்டிற்காக சபையால் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) இவ் வீதியின் நீளம் 343.5 மீற்றர்களும், (1126.7 அடி) சாதாரண அகலம் 5.6 மீற்றர் (18.4 அடி) ஆன போதிலும் வேலை அதிகாரியால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த அளவீட்டு அறிக்கையின் படி, இதன் நீளம் 353.65 மீற்றர்களும், (1160 அடி) அகலம் 5.4 மீற்றர்களும் (18 அடி) ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(iii) முதலாம் முறை தாரிட்டு 2 வாரங்களுக்குள் இரண்டாம் முறை தாரிட வேண்டிய போதிலும் இவ்வீதி முதல் தடவை தாரிட்டு கணக்காய்வுத் தினமாகிய 2014 சனவரி 03 ஆம் திகதி வரையிலுமான 7 மாத காலம் கடந்திருந்த போதிலும் ரூபா 275,583 தொகை மதிப்பிடப்பட்டிருந்த இரண்டாம் முறை தாரிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) பொருட்கள் மற்றும் ஊழியத் தேவைப்பாட்டுப் பட்டியலின் படி, 1160 அடி நீள மற்றும் 18 அடி அகலமான பணியை மேற்கொள்வதற்கு 275 பயிற்சிபெறாத ஊழிய நாட்கள் தேவையானதாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் சம்பளப் பட்டியல் பரீட்சிப்பின் போது இதற்காக 316 நாட்கள் பயன்படுத்தப்பட்டு ரூபா 252,800 தொகை செலுத்தப்பட்டிருந்தமையால் மேலதிகமான 41 நாட்களுக்காக ரூவபா 32,800 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) களுத்துறை தெற்கு சமரநாயக்க ஒழுங்கை தாரிடல்

---

மேற்குறித்த வீதியின் 325 அடி நீள, 20 அடி அகலத்திற்காக ரூபா 501,344 தொகையான செலவின மதிப்பீடு 2012 யூன் 26 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நேரடி உழைப்பை அடிப்படையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2014 சனவரி 04 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சம்பளப் பட்டியலின் படி, 2013 யூலை 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு யூலை 28 ஆம் திகதி வரையிலும், மீள செப்தெம்பர் 20 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் வேலைப் பூர்த்தியறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டம் பூர்த்தியடைந்ததை அடுத்து அளவீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) இவ் வீதியின் நீளம் 78.9 மீற்றர் (259 அடி) ஆன போதிலும், 9 சந்தர்ப்பங்களின் போது எடுக்கப்பட்ட அளவீட்டின் படி, சாதாரண அகலம் 5.6 மீற்றர் (18 அடி) ஆகக் காணப்பட்டதுடன் அளவீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிராமையால் ஆய்வொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(iv) முதன் முறை தாரிடல் 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி பூர்த்தியடைந்த போதிலும் முதல் முறை தாரிடப்பட்டு 2 வாரங்களுக்குள் இரண்டாம் முறை தாரிடப்படுவது மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக அங்கீகரிக்கப்பட்ட

மதிப்பீட்டின் ரூபா 98,778 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2014 சனவரி 03 ஆம் திகதி வரையிலும் இரண்டாம் முறை தாரிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.6 செயற்பாடு/ முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்**

**2.6.1 தீர்க்கப்படாத கணக்குகள்**

(அ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த மின்சாரக் கடன்பட்டோர் ரூபா 2,471,702 தொகையும் மதுபானசாலை வருமானம் ரூபா 991,283 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தனியார் நிறுவகத்திற்கு, தனி நபருக்கும் மதிப்பீட்டுக் கட்டணமாக முறையே ரூபா 438,900 தொகையும், ரூபா62,000 தொகையும் ரூபா 1,046,657 தொகையும் 2001 ஆம் ஆண்டின் போது கடன்கொடுத்தோராக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2014 யூலை 24 ஆம் திகதி வரையிலும் இது தீக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1995 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் இனங்காணப்படாத ரூபா 137,726 தொகையான முற்பண மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

(அ) நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியின் கீழ் மேல் மாகாண மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரப் பகுதிகளுக்குள். 18 இடர் வெளிப்பாட்டு முறைமைகளை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு மானியச் செயற்திட்டம் (ORET) 2006 முதல் 2008 ஆம் ஆண்டு வரை செயற்திட்டம் கட்டம் I இன் கீழும் 2009 முதல் 2010 வரை செயற்திட்டம் கட்டம் II இன் கீழும் வழங்கப்பட்டிருந்த பல வகையிலான 7 வாகனங்களும் இயந்திர உபகரணங்களும் மேலதிக உதிரிப்பாகங்கள் உள்ளடங்கலாக 204 மில்லியனுக்கு மேலான பெறுமதியைக் கொண்ட பதிவுப் பொருட்கள் நிதிப் பிரமாணம் 751(1) இன் பிரகாரம் பதிவுப் பொருட் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீயணைப்பு சேவைப் பிரிவின் பதிவுப் பொருட்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2008 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2013 நவம்பர் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையிடமுள்ள சகல கட்டிடங்களும் காணிகளும் தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்ட முறையான ஓர் பதிவேடொன்று பேணப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையிடமுள்ள காணிகள் தொடர்பில் உரிய உரித்து உறுதிகள் பரீட்சிக்கப்படுவதற்காக 2014 சனவரி 03 ஆம் திகதி கணக்காய்விற்குச்

சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் குறித்த உறுதிகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6.3 முற்பணத் தீர்ப்பனவு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1995 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து 2013 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,088,166 கூட்டுத்தொகையான முற்பணம் கணக்காய்வுத் தினமாகிய 2014 யூலை 24 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முற்பணம் தீர்க்கப்படுகையில் ரூபா 10,480 தொகை கூடுதலாக அறவிடப்பட்டிருந்ததுடன் தீர்க்கப்படாத முற்பண மீதியில் இனங்காணப்படாத ரூபா 137,726 தொகையான மீதியும் காணப்பட்டது.

(ii) ஹிமிதிரியாவ தகனக்கூடத்தை நிர்மாணிப்பதற்காக 2008 ஒக்டோபர் 09 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 தொகையான முற்பணம் அந் நிறுவகத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டு பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் முற்பணக் கணக்கிற்கு அப் பெறுமதி சீராக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாணிப்பிற்காக மேலும் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 1,511,827 (15% பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக) அளவும் கணக்கிடப்படுவதற்கோ அல்லது கணக்குகளில் வெளிப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1998 ஆம் ஆண்டின் இறைச்சிக் கடை வாடகை வருமானமாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 72,127 தொகையான 03 காசோலைகளும் 2000, 2001, 2002 ஆம் ஆண்டுகளின் போது வீத வரி வருமானத்திற்காகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 20,984 தொகையான காசோலைகளும் மதிப்பிழந்திருந்ததுடன் அவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது தீர்க்கப்படாத முற்பணமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

**2.6.4 அத்துமீறிய நிர்மாணிப்புகள்**

அத்துமீறிய நிர்மாணிப்புகள் பதியப்பட்டிருந்த பதிவேட்டின் படி, 2013 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் 68 அத்துமீறிய நிர்மாணிப்புகள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அத்துமீறிய நிர்மாணிப்புகளை இடைநிறுத்துமாறு குறித்த தரப்பினருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.6.5 பதவியணி முகாமைத்துவம்**

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 35 ஊழியர்களின் பற்றாக்குறையும், இரு ஊழியர்களின் மிகையும் காணப்பட்டன.

(ii) சபையின் செயலாளர் பதவி பல வருடகாலமாக வெற்றிட நிலையில் காணப்பட்டது.

(iii) 2007, 2008 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் போது தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த சுகாதார ஆலோசகர்கள் நால்வர் சுகாதார ஆலோசனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாது கணக்காய்வுத் தினமாகிய திசெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் வருமானப் பிரிவின் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**2.6.6 வாகனக் கட்டுப்பாடு**

(அ) சபையின் நகர சபை உறுப்பினரால் 2013 பெப்ரவரி 23 ஆம் திகதி முதல் திசெம்பர் 15 ஆம் திகதி வரையான காலத்தின் போது தலைவர்/ செயலாளரின் ஆலோசனைப் படியாகக் குறிப்பிடப்பட்டு 4 வாகனங்கள் 17684 கிலோ மீற்றர் தொலைவான பயணத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இப் பயணத்திற்காக அவர்களின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் தொடர்பாக எழுத்துமூலச் சான்றுகள் எதுவும் இருக்கவில்லை. மேலும். மேற்குறித்த சந்தர்ப்பங்களின் போது வாகனம் பயன்படுத்தப்பட்ட ஓட்ட அட்டவணைகளில் குறுங்கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரித்தான வாகனங்களில் பயன்படுத்தப்பட்ட எரிபொருள் அளவு தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டின் போத சபையின் எவ்வித வாகனத்திற்கும் உரித்தான மாதாந்தப் பொழிப்பு தயாரிக்கப்பட்டிராததுடன் 05 வாகனங்களுக்குரித்தான 2 மாதங்கள் முதல் 9 ½ மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்குரித்தான ஓட்ட அட்டவணைகள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர சபை அதிகாரப்பகுதிக்கு வெளியே தீயணைப்பு சேவைகளை வழங்குவது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்காக தீ இடர் நிவாரணச் சான்றிதழ் வழங்கப்படல், கட்டிடத் திட்டம் மற்றும் தீப் பாதுகாப்பு முறைமையைச் சான்றுறுதியிடல், அம்பியூலன்ஸ் வண்டி சேவை வழங்குதல், தீயணைப்பு சேவைப் பயிற்சி வகுப்புகளை நடாத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக சபை தீர்மானத்தின் படி, கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக நகர சபை துணை ஏற்பாட்டை அங்கீகரித்துக் கொண்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) பாதீடுக் கட்டுப்பாடு